DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

**MCOP No.34/2022**

2ம் எதிர்மனுதாரர் தரப்பு 2வது சாட்சி வாக்குமூலம் (RW2)

| | |
|---|---|
| Name | **மகேஷ்குமார்** |
| Father's Name | **த/பெ. பாலகிருஷ்ணன்** |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2024.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:–</u>**

**1.** நான் தற்போது 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விபரம் தெரியும் என்ற வகையில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சார்பில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. மனு சம்பந்தமாக எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பங்கள் செய்துள்ளேன். எனது வழக்கிற்கு ஆதரவாக பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 1ம் எதிர்மனுதாரர் பெயரில் எங்கள் நிறுவனத்தால் விபத்தில் ஈடுபட்டிருந்த வாகனத்திற்கு வழங்கப்பட்டிருந்த காப்பீடு சான்று 3 பக்கங்களைக் கொண்டது உண்மை நகல் தாக்கல் செய்துள்ளேன். அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1. விபத்து நடைபெற்ற காலத்தில் விபத்தில் ஈடுபட்ட வாகனத்திற்கு எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் எடுக்கப்பட்ட காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை ஓட்டிய நபருக்கும் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். தற்போதைய வழக்கு மனுதாரர் விபத்து சமயத்தில் அந்த வாகனத்தில் லோடுமேனாக பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. அனுமதிக்கப்படாத நபராகத்தான் பயணித்துள்ளார். எங்கள் காப்பீடு படி தற்போதைய வழக்கு மனுதாரர் 3ம் நபர் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மனுதாரரும் ஓட்டுநரும் அந்த வாகனத்தில் மட்டுமே பயணித்தார்கள் என்றும், வேறு நபர்கள் யாரும் பயணிக்கவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படி மனுதாரருக்கு காப்பீடு ஊர்ஜிதத்தில் உள்ளதால் எங்கள் நிறுவனம்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

<u>மறுவிசாரணை:-</u> இல்லை

ஒம்/-P.V.வஷீத்குமார்,
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**